

கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு கழகத்துணைப் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.



கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு இந்து என்.ராம் அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.

### அரசுப் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் நிகழ்த்திக் காட்டும் சாதனைகள் ஏராளம்!

# தமிழ்நாட்டு மாணவர்கள் மீது துளியும் அக்கறையில்லாத ஆளுநருக்கு கண்டனம்!

## திருச்சி தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, ஆக. 21 –

மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், திருச்சி தெற்கு மாவட்ட கழக கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் என். கோவிந்தராஜ் தலைமையில், நடைபெற்றது . கூட்டத்தில் மாநகர செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே. என். சேகரன், சபியுல்லா, மாவட்ட நிர்வாகி கோவிந்தராஜ், செங்குட்டுவன், லீலாவேலு, மூக்கன், குண சேகரன் மற்றும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், மாவட்ட – மாநகர அணி அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதி கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் 40% இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருந்த கிளை, வார்டு, வட்ட, பேரூர், நகர, ஒன்றிய, பகுதி, மாநகர கழக செயலாளர்கள், BLA2, BDA நிர்வாகிகளுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து மற்றும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றபடுகின்றது.

ஆர்.எஸ்.எஸ். மனநிலையுடன் எப்போதும் அரசுப் பள்ளிகள் மீது அவதூறு பரப்பும் ஆளுநர் அவர்களே ...! ஏழை மாணவர்களின் படிப்பின் மீது அக்கறை உள்ளவர் போல ”நானும் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேன் என்பதை காட்டிக் கொள்வதற்காக நான்கைந்து மாதங்களுக்கு ஒருமுறை பள்ளிக் கல்வித்துறையை நோக்கி இப்படி பேசுவது உங்களின் வாடிக்கையாகிவிட்டது. எங்கள் அரசுப் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் நிகழ்த்திக் காட்டும் சாதனைகள் எண்ணிலடங்காதது. சாதனையாளர்களை மக்களும் #DravidianModel அரசும் கொண்டாடி வருகிறது. கமலாலயத்தின் ASER எனும் போலி அறிக்கையை உயர்த்திப்பிடிக்கும் நீங்கள், அரசுப் பள்ளிகளின் மீது அக்கறை இருந்தால் டெல்லியை நோக்கி ”தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதி என்னவானது? தமிழக மாணவர்களின் மீது துளியும் கூட அக்கறையில்லாத தமிழக ஆளுநரை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும்!**

இந்தியா கூட்டணியினர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு பதிலாக தேர்தல் ஆணையம் கூறிய விளக்கத்தில் மேலும் சில கேள்விகளை கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் எழுப்பியுள்ளார். அக்கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய விடையை அளிக்க வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்தியும் தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்? எப்படி இத்தனை புதிய வாக்காளர்களின் பதிவு வழக்கத்திற்கு மாறாகக் குறைவாக உள்ளது. இந்த இளம் வாக்காளர்கள் கணக்கெடுக்கப்பட்டனரா?

தகுதிக்குரிய நாளில் 18 வயது நிறைவுற்ற எத்தனை இளம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர் என்பதைச் சொல்லும் தரவுகள் ஏதேனும் இருக்கிறதா?

வாக்காளராக பதிவு செய்யும் விதிகள் (Registration of Electors Rules)

1960இன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விசாரணை மற்றும் இரண்டு முறையீடு நடைமுறைக்கான காலவரையறை எதிர்வரும் பீகார் மாநிலத் தேர்தலில் பெருமளவிலான வாக்காளர்களை விலக்கும் வாய்ப்புள்ளது. இவ்விவகாரத்தைத் தேர்தல் ஆணையம் எவ்வாறு தீர்க்கப் போகிறது?

SIR) பிற மாநிலங்களில் சிறப்புத் தீவிரத் திருத்தம் ( மேற்கொள்ளப்படும்போது, இந்த நடைமுறைச் சிக்கல்களைத் தேர்தல் ஆணையம் கணக்கில்கொள்ளுமா?

கடந்த மே மாதம் 01/05/2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மறைந்த வாக்காளர்களின் பெயரை நீக்குமாறு 17/07/2025 அன்று தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் முறையிட்டோம். இது எப்போது நிறை வேற்றப்படும்?

வாக்காளரின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணமாக ஆதாரை ஏற்கத் தேர்தல் ஆணையத்தைத் தடுப்பது எது?

**தி.மு.கழகம் போராட தயாராக உள்ளது!**

”நியாயமான தேர்தல்கள் என்பதே தேர்தல் ஆணையத்தின் இலக்காக இருக்குமானால், அது மேலும் வெளிப்படைத்தன்மையுடனும் வாக்காளர்களுக்கு நெருக்கமாகவும் இருக்கலாமே ? பீகார் மாநிலம் போல தமிழ்நாட்டில் அப்படி ஒரு வாக்காளர் சிறப்பு திருத்தம் நடைபெற்றால், சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் எதிர்த்துப் போராட தி.மு.கழகம் என்றென்றும் தயாராக உள்ளது என்பதை

இக்கூட்டம் தெரிவிப்பதுடன் இதுபோன்ற செயல்களில் ஈடும்படும் ஒன்றிய அரசை வன்மையாக கண்டிக்கின்றது. மேற்கண்ட அனைத்து தீர்மானங்களையும் ஏகமனதாக நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இரங்கல் தீர்மானம்**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்கள், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் கழக பொருளாளருமான டி.ஆர். பாலு அவர்களின் மனைவியும், டி.ஆர். பி. ராஜா அவர்களின் தயாருமான ரேணுகா தேவி அவர்கள் மறைந்தார் . திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 31வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுஜாதா அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றது. அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒரு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி :**

ஆம்புலன்ஸ் என்பது உயிர் காக்கக்கூடியது அதனுடைய முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் எடப்பாடி பழனிச்சாமி பேசியிருக்கக் கூடாது அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி !

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், பள்ளி கல்வி துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டார். கூட்டத்திற்கு முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

தமிழக பள்ளிக் கல்வி துறை நலிவடைந்துள்ளதாக அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

தமிழக பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். தனியார் பள்ளிக்கு நிகராக அரசு பள்ளிகளிலும் பல தொழில்நுட்பங்களை கொண்டு மாணவர்களுக்கு கல்வி கற்றுத் தரப்படுகிறது. தமிழக மாணவர்கள் உலக அளவில் சாதனை புரிந்து வருகிறார்கள், தமிழகத்தில் தொடக்கக் கல்வி அளவில் இடைநிற்றல் இல்லாத நிலை தான் நிலைமை வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தேசிய அளவில் இடைநிற்றல் சதவீதம் 14 சதவீதமாக உள்ளது ஆனால் தமிழகத்தில் இடைநிற்றல் 7.7 சதவீதமாக குறைத்துள்ளோம். மாநில கல்விக் கொள்கையை பொறுத்தவரை அனைவருக்குமான கல்வியை கொண்டு சேர்த்துள்ளோம். 13 ஆண்டுகளுக்குப் பிறகு இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி துறையில் காலி பணியிடங்களை நிரப்பும் வகையில் செயல்பட்டு வருகிறோம் .

பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு செயல்பாடுகளை செய்துவருகிறோம்.

பள்ளி கட்டிடங்களை சீரமைத்து வருகிறோம் பள்ளி கட்டிடங்கள் இல்லாத இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது இப்படி இருக்க கூடிய நிலையில் எதை வைத்து அன்புமணி ராமதாஸ் பள்ளிக்கல்வித்துறை நலிவடைந்துள்ளதாக கூறுகிறார் என்பது தெரியவில்லை அதை அவர் விளக்க வேண்டும்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. காலை உணவு திட்டத்தை குடியரசுத் தலைவர் பாராட்டியுள்ளார்.

அரசியல் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்திற்காக ஒன்றிய பாஜக அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்க மறுத்து வரும் நிலையில் அதற்காகத்தான் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் குரல் கொடுக்க வேண்டுமே தவிர நம் தலையில் நாமே மண்ணள்ளி போட்டுக்கொள்ளும் வகையில் அன்புமணி ராமதாஸ் பள்ளிக்கல்வித்துறை நலிவடைந்துள்ளது என்கிற கருத்தை கூறக்கூடாது.

ராமதாஸ் மற்றும் அன்புமணி ராமதாஸ் இருவரும் கல்வி சார்ந்து விமர்சனங்களை வைக்கும் போது அதில் உண்மைத் தன்மை இருந்தால் அது குறித்து நடவடிக்கை எடுப்போம். நாங்கள் பள்ளிக்கல்வித்துறை குறித்து அரசியல் கட்சி தலைவர்கள் வைக்கும் விமர்ச னங்களையும் கண்டனங்கள் குறித்தும் எங்களுடைய ஆய்வுக் கூட்டங்களில் விவாதிப்போம் தவறு இருந்தால் நிச்சயமாக அதை திருத்திக் கொள்வோம். பள்ளி மாணவர்களுக்கு போதை பொருட்கள் குறித்தான விழிப்புணர்வை தொடர்ந்து பல்வேறு முறைகளில் வழங்கி வருகிறோம்.

ஆம்புலன்ஸ் என்பது உயிர் காக்கக்கூடியது அதனுடைய முக்கியத்து வத்தை குறைக்கும் வகையில் எடப்பாடி பழனிச்சாமி பேசியிருக்கக் கூடாது. அவர் பிரச்சாரக் கூட்டத்தில் நாங்கள் ஏன் ஆம்புலன்ஸை அனுப்பி வைக்கப் போகிறோம் முன்னாள் முதல்வராக இருந்தவர் இது போன்ற அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டை வைக்கக் கூடாது என்றார்.



சோழிங்கநல்லூர் தொகுதி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 வார்டு எண் 186 புழுதிவாக்கம் தந்தை பெரியார் அரசு உயர்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினரின் 2023–2024 ஆம் ஆண்டு மேம்பாட்டு நிதியிலிருந்து 55.லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ் திறந்து வைத்தார். இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் 14வது மண்டலக்குழு தலைவர் பெருங்குடி எஸ். வி. ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் ஜெ.கே.மணிகண்டன், வட்டச் செயலாளர் குமாரசுவாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் அனைவரும் உடனிருந்தனர்.

### நக்கீரன் இதழில் பணிபுரிந்த

# பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் மறைவு! ரூ.10 இலட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக.21-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நக்கீரன் இதழில் பணியாற்றிய ஆர்.டி. சக்திவேல் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பத்து இலட்ச ரூபாய் நிதி உதவியாக அவரது குடும்பத்தாருக்கு வழங்கி உத்தரவிட்டுள்ளார்.**

நக்கீரன் இதழில் பணிபுரிந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் திண்டுக்கல் மாவட்டம் விளாம்பட்டியைச் சேர்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்தவர் சக்திவேல் என்றாலும், இவருடைய உழைப்பும் எழுத்தாற்றலும் சக்திவாய்ந்தவை,

“நக்கீரன்” இதழில் ஆர்.டி.எ(க்)ஸ் எனும் பெயரில் கட்டுரைகள் எழுதி, பாராட்டப்பட்டுள்ள எழுத்தாளர் ஆர். டி.சக்திவேல் சினிக்கூத்து என்ற பெயரில் சினிமா செய்திகளை தொடர்ந்து எழுதிவந்துள்ளார். அரசியல் செய்திகள், இலக்கியப் படைப்புகள், கவிதைகள் என அவருடைய எழுத்து பல பரிமாணங்களைக் கொண்டது.

கடந்த 6 ஆண்டுகளாகவே உடல் நலம் குன்றியிருந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் தொடர்ச்சியாக சிகிச்சை மேற்கொண்டும் பலனின்றி இயற்கை எய்தியுள்ளார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

ஆர்.டி.சக்திவேல் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப் பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பத்திரிகையாளர் ஆர். டி.சக்திவேல் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பெருநிறுவன விவகாரம் : பயனர்களின் குறைகளுக்கு

# 17 மொழிகளில் கட்டணமில்லா தொலைபேசி மூலம் தீர்வு காணலாம்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி! ஒன்றிய அமைச்சர் பதில்!



*புதுடெல்லி, ஆக. 21 -*

*ஒன்றிய அரசின் பெரு நிறுவன விவகார அமைச்சகம் தொடர்பாக பயனர்களிடமிருந்து ஏற்படும் குறைபாடுகள் மற்றும் புகார்களைத் தவிர்க்க MCA இணைய தளம் சமீபத்திய பதிப்பு 3ஐ ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா? ஆம் எனில் அதன் பயன்பாடு அதற்கான செலவு குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*அவரது கேள்விகள் வருமாறு:*

*ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம் தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அதன் பயனர்களிடமிருந்து ஏற்படும் குறைபாடுகள் மற்றும் புகார்களைத் தவிர்க்க 38 புதிய மின்படிவங்களுடன் MCA இணைய தளம் சமீபத்திய பதிப்பு 3 ஐ ஒன்றிய அரசு அறிமுகப் படுத்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன ?*

*MCA இணையதளத்தில் பதிப்பு 3 ஐ அறிமுகப்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் செய்யப்பட்ட மொத்த செலவு எவ்வளவு?*

*பட்டயக் கணக்காளர்கள் மற்றும் நிறுவனச் செயலாளர்கள் MCA இணைய தளத்தின் சமீபத்திய பதிப்பு 3 வாயிலாக ஒரு கோடிக்கும் மேற்பட்ட மின்படிவங்களை தாக்கல் செய்ய முடியுமா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?*

*eDaakhil போர்டல், தேசிய நுகர்வோர் உதவி எண் (NCH) மற்றும் Voxya தளம் ஆகியவை நுகர்வோர் தொடர்பான புகார்களைப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்டதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? எ ன்று அவர் கேள்வி கேட்டிருந்தார்.*

*அதற்கு ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம்; சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:*

*ஆம். ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம் ஜூலை 14, 2025 முதல் அமலுக்கு வரும் வகையில் 38 மின் படிவங்களை MCA21 பதிப்பு 2லிருந்து பதிப்பு 3க்கு மாற்றியுள்ளது. இவற்றில் 13 வருடாந்திர தாக்கல் படிவங்கள், 6 தணிக்கை /செலவு தணிக்கை படிவங்கள் மற்றும் பல இணக்கம் மற்றும் அறிக்கையிடல் படிவங்கள் அடங்கும். இந்த மாற்றம் இணக்க செயல்திறனை மேம்படுத்துதல், தரவு அறிக்கையிடலை தரப்படுத்துதல் மற்றும் இணைய அடிப்படையிலான தாக்கல், மேம்படுத்தப்பட்ட சரிபார்ப்புகள், முன் நிரப்பப்பட்ட படிவங்கள் மற்றும் வலுவான அங்கீகார வழிமுறைகள் போன்ற அம்சங்கள் மூலம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிறுவன நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*இந்த மின்படிவங்களைத் தொடங்குவதற்காக ஏற்படும் செலவு MCA21 V3 திட்டத்திற்கான ஒட்டு மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டின் கீழ் வருகிறது. இதுவரை செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் மொத்த செலவு ரூ. 243.39 கோடி ஆகும்.*

*மார்ச் 8, 2022 அன்று MCA21 V3 இல் முதல் படிவங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து, பட்டய கணக்காளர்கள், நிறுவன செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களால் 1.30 கோடிக்கும் மேற்பட்ட eForms தாக்கல் செய்யப்பட்டுள்ளன.*

*நுகர்வோர் தகராறுகளை விரைவாகவும் தொந்தரவில்லாமல் தீர்க்கவும், மின்னணு புகார் தாக்கல் செய்வதற்காக eDaakhil போர்டல் தொடங்கப்பட்டது. இது இப்போது eJagriti போர்ட்டலில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. மைக்ரோசர்வீஸ் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு / இயந்திர கற்றல் ஒருங்கிணைப்பு மற்றும் முகமற்ற ஆன்போர்டிங் மற்றும் பங்கு அடிப்படையிலான டாஷ்போர்டுகள் போன்ற சமீபத்திய அம்சங்கள் மூலம் நுகர்வோர் குறை தீர்க்கும் முறையை மேம்படுத்த eJagriti போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது*

*நாடு முழுவதிலுமிருந்து வரும் நுகர்வோர் தங்கள் குறைகளை இந்தி, ஆங்கிலம், காஷ்மீரி, பஞ்சாபி, நேபாளி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், மைதிலி, சந்தாலி, பெங்காலி, ஒடியா, அசாமி மற்றும் மணிப்பூரி உள்ளிட்ட 17 மொழிகளில் 1915 என்ற கட்டணமில்லா எண் மூலம் பதிவு செய்யலாம். இந்தக் குறைகளை ஒருங்கிணைந்த குறை தீர்க்கும் வழிமுறை (INGRAM), ஒரு சர்வசேனல் ஐடிஇயக்கப்பட்ட மத்திய போர்ட்டலில், பல்வேறு சேனல்கள் மூலம் WhatsApp (8800001915), SMS (8800001915), மின்னஞ்சல் (nch ca@gov.in), NCH செயலி, வலை போர்டல் (consumerhelpline.gov.in) மற்றும் Umang செயலி மூலம் தங்கள் வசதிக்கேற்ப பதிவு செய்யலாம்.*

*‘கன்வர்ஜென்ஸ்’ திட்டத்தின் ஒரு பகுதியாக, NCH உடன் தன்னார்வமாக கூட்டு சேர்ந்த 1110 நிறுவனங்கள், இந்த குறைகளுக்கு அவற்றின் தீர்வு செயல்முறைக்கு ஏற்ப நேரடியாக பதிலளித்து, போர்ட்டலில் புகார்தாரருக்கு ஒரு கருத்தை வழங்குவதன் மூலம் திரும்பப் பெறுகின்றன.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.*



திருவள்ளூர் தொகுதி திருவள்ளூர் நகரம் வார்டு எண் 9 மற்றும் 12 பகுதிகளுக்குகான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு பயனளிகளுக்கு பல்வேறு சான்றிதழில் வழங்கினார் .உடன் திருவள்ளூர் நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், அரசு அலுவலர்கள் ரஜினிகாந்த், தாமோதரன், மோகன், ஜெயசீலன், உதயகுமார், நிர்வாகிகள் கே.அரிகிருஷ்ணன், பொன்.பாண்டியன், வி.எஸ்.நேதாஜி, டி.எம்.ரவி, டி.கே.பாபு டி.ஆர். திலீபன், கவுன்சிலர்கள் தாமஸ்(எ)ராஜ்குமார், த.அயூப்அலி, கு. பிரபாகரன், நீலாவதி பன்னீர், தனலட்சுமி சீனிவாசன், எஸ். நரேஷ், என். பாலகிருஷ்ணன், அ.பவளவண்ணன், பா. ராஜி, சுனில், என். பாலச்சந்தர் உள்ளிட்ட வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.